දුරකථන
தொலைபேசி
Telephone
) 0112669192 ,0112675011
)0112698507 , 0112694033
) 0112675449 ,0112675280

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
) 0112693866
) 0112693869
)0112692913

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல் முகவரி
e-mail
)postmaster@health.gov.lk
)

වෙබ්අඩවිය
இணையத்தளம்
) www.health.gov.lk

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXJ/02/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2021/ 06/ 28
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார் அமைச்சு
**Ministry of Health**

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02-47/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் இலங்கை தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய திணைக்கள தலைவர்களும்,

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்ப சேவை வகைக்குரிய (MN – 03 – 2006 - (A)) அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைப் பரீட்சை – 2021**

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்ப சேவைப் பிரிவின் (MN – 03 – 2006 - (A)) தரம் I இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்கள் முடிவடைய முன் தேர்ச்சி அடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் **2021/08/07** ஆம் திகதிகளில் நடைபெறும் என இத்தாள் அறிவிக்கப்படுகிறது. பரீட்சை நடைபெறும் இடம் மற்றும் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்படப்படும்.

**02.** தகைமைகள் -

சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்ப சேவை வகைக்குரிய (MN – 03 - 2006 - (A)) தரம் I இல் நியமனம் பெற்ற படப்பிடிப்பாளர், மின்னுயர்த்தி தொநுட்பவியலாளர் (Lift Technician), பொறித் தொகுதி மேற்பார்வையாளர், வளி சீராக்கி தொழிநுட்பவியலாளர் (Air Condition Technician), போக்குவரத்து அலுவலர், போக்குவரத்து முகாரி (Transport Forceman), மின்சார தொழிநுட்பவியலாளர், பட வரைஞர், தொழிநுட்ப அலுவலர் (சிவில்), தொழிநுட்ப அலுவலர் (மின்) போன்ற பதவிகளில் உள்ள அலுவலர்களும் மற்றும் இதுவரை வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் தேர்ச்சி பெறாத அலுவலர்களும் மாத்திரம் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் :- 2020.12.31 ஆம் திகதியுடன் தரம் I ற்கு நியமனக் கடிதம் பெற்றவர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளவும்.**

03. **விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு **2021/07/15** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவையென பிரிவுத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தனது விண்ணப்பப் படிவத்துடன் சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடைய கடித உறைகள் இரண்டு அனுப்பப்படல் வேண்டும். (இக் கடிதவுறையில் விரும்பியவாறு அலுவலக முகவரியை அல்லது தனிப்பட்ட முகவரியினை எழுதியனுப்பலாம்)

**தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்களும், தவறான விண்ணப்பங்களும், முழுமையாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் எது வித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.**

கவனிக்கவும் : மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - 09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். **மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

04 **பரீட்சைக் கட்டணம்**

4.1 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் விடயம் ஒன்றிற்கு ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன் மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

4.2 இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக்காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றவோ, மீள வழங்கப்படவோ மாட்டாது.

05 **பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்**

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது

5.2 ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுடைய கடவுச் சீட்டு

06. பரீட்சைத்திட்டம்:

இந்த வினைத்திறன் தடைப்பரீட்சை ஒவ்வொரு பதவியின் பொருட்டும் பொது வினாத்தாளைக் கொண்டிருக்கும். மொத்தப் புள்ளிகள் 100. பரீட்சையில் சித்தியடைவதற்கு குறைந்த பட்சம் 40 புள்ளிகள் பெறுதல் வேண்டும். வினாத்தாள் 03 மணி நேரத்தைக் கொண்டிருக்கும்.

07 பரீட்சைப் பாடத்திட்டம்

07.1 பொது வினாத்தாள் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

1. ஒரு குறிப்பிட்ட அறிக்கை அல்லது கலந்துரையாடலின் குறிப்பைப் படித்து கொடுக்கப்பட்ட தலைப்பில் ஒரு அறிக்கையை தயாரித்தல். (25 புள்ளிகள் )
2. ஒரு குறிப்பிட்ட அறிக்கை அல்லது கலந்துரையாடலின் குறிப்பைப் படித்து கொடுக்கப்பட்ட தலைப்பில் கடிதம் ஒன்றை தயாரித்தல். (25 புள்ளிகள் )
3. ஒவ்வொரு பதவியின் கடமைகள் தொடர்பில் 03 விடய ஆய்வு (Case Study) வினாக்களில் ஏதாவது 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (விடய ஆய்வு வினா ஒன்றுக்கு 25 புள்ளிகள், இரண்டு ஆய்வு வினாக்களுக்கும் மொத்தம் 50 புள்ளிகள்)

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த விபரங்களை **www.health.gov.lk** என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கவனிக்கவும் : சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.

Gamage

சாமிக எச் கமகெ
பிரதிப் பணிப்பளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக
சுகாதார அமைச்சின்.

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

**EXJ**

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பாவனையின் பொருட்டு

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்ப சேவை வகைக்குரிய (MN– 03-2006-(A))அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைப் பரீட்சை 2021 (முதலாவது தவனை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்) : ............................................................

............................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) : ............................................................

............................................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி : ............................................................................................................

(ii) வகுப்பு II "அ" / தரம் II ற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதியும், கடித இலக்கமும்: ..................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ............................................................................

(iv) தேசிய அடையாள அட்டை இல : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

(v) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

02. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் ( தமிழில்) : ......................................................

(ஆங்கிலத்தில்) : ......................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..............................................................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் [ ] மாகாண சபையினால் [ ]

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் : ..........................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ..................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) ..............................................................................

............................................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ..................................................

............................................................................................................................

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ............................................

04. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ..................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ……………………..

| முத்திரைக் கூண்டு |
|---|

05. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப்பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா…………………… பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ……………………………… ………………………………………………

விண்ணப்பதாரரின் கையொப்பம்

06. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………… ………………………………………………..

பெயர் பெயரும் கையொப்பமும், திகதியும்.

07. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ………………………………………………… என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத படியால் ரூபா …………….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமை உள்ளதெனவும் எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………… ……………………………………………….

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

08. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி...………………………………………..……………… என்பவர் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்ப சேவை வகைக்குரிய (MN– 03-2006-(A)) உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி …………………………… ……………………………………………………..…………

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்

இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்

(*தேவையற்றனவற்றை கீறிடவும்)